JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 19 |
| NAME | : | **குமரேசன்** |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.10.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்துவருகிறேன். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன், சரோஜா ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும் அவர்கள் மாயவன் கேவிலில் சீட்டு பிரித்தார்கள். அவர்கள் வாரச்சீட்டு, மாதச்சீட்டு பிரித்தார்கள்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் 2 சீட்டுகள் சேர்ந்தேன். நான் 42 வாரங்கள் பணம் செலுத்தினேன். நான் ரூ. 34 ஆயிரம் அளவில் பணம் செலுத்தினேன்.

2019 வரை பணம் செலுத்தினேன், ஆஜர் எதிரிகள் சீட்டை முறித்து விட்டு போய்விட்டார்கள். 2019 பொங்கலுக்கு மறுநாள் நாங்கள் போய் கேட்டோம். அவர்கள் நாங்கள் சீட்டு நடத்தவில்லை என்று ஏறுக்கு மாறாக திட்டினார்கள். எனக்கு பணம் கிடைக்கவில்லை. ஆஜர்எ திரிகள் போய்

விட்டதால் பணம் கிடைக்கவில்லை. 2019 ல் ஒரு 10 மாதம் கழித்து வந்தார்கள். கிருஷ்ணன் அதை சொன்னார். நாங்கள் போய் ஆஜர் எதிரிகள் வீட்டில் கேட்டோம். அதற்கு ஏறுக்கு மாறாக பேசி கொலைசெய்து விடுவோம் என்று சொன்னார்கள். நாங்கள் மாலை 5.00 மணியளவில் புகார் கொடுத்தோம். கிருஷ்ணன் புகாரை கொடுத்தார். அதற்கு பிறகு பணம் கிடைக்கவில்லை போலிசார் என்னை விசாரித்தார்கள். எல்லோருக்கும் பணம் கிடைக்கவில்லை.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 18 |
| NAME | : | சரோஜா |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.10.2024

முதல் விசாரணை

நான் வெய்க்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்துவருகிறேன். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி, முருகன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு பிடித்தார்கள். என்னிடம் சீட்டு போட கேட்டார்கள். அவர்கள் வாரச்சீட்டு, மாதசீட்டு பிரித்தார்கள்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் 2 சீட்டுகள் சேர்ந்தேன். அதில் 42 வாரங்கள் பணம் செலுத்தினேன். ரூ.34780 பணம் செலுத்தினேன்.

நான் ரூ.33000 வாரச்சீட்டில் 2 சீட்டுகள் சேர்ந்தேன். அதில் 72 வாரங்கள் பணம் செலுத்தினேன். அதில் ரூ.32100 பணம் செலுத்தினேன்.

சுமார் 6 வருடத்திற்கு முன்பு தை மாதம் வரை சீட்டுபிரித்தார்கள் அதற்கு பிறகு பிரிக்கவில்லை. 9 மாதம் அவர் கள் ஊரில் இல்லை. அதற்கு பிறகு ஊருக்கு வந்தார்கள். கிருஷ்ணன் சீட்டு கேட்க போனதாக

சொன்னார்கள். நானும் போனேன். காலை 7.00 மணியளவில் மாயவன் கோவிலுக்கு போனேன். ஆஜர் எதிரிகளிடம் பணம் கேட்டேன். அப்போது எல்லோரையும் தேவடிய பட்டறை என்று அசிங்கமாக பேசினார்கள். அதற்கு பிறகு எல்லோரும் சாயங்காலம் காவல் நிலையம் சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள். எனக்கு பணம் கிடைக்கவில்லை. எல்லோருக்கும் பணம் கிடைக்கவில்லை.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 17 |
| NAME | : | முருகன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.10.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் லாரி பஞ்சர் ஒட்டும் வேலை செய்துவருகிறேன். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி, செல்வக்குமாரி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் மாயவன் கோவிலில் சீட்டு நடத்தினார்கள். ஆஜர் எதிரிகள் எங்கள் வீட்டிற்கு வந்து சீட்டு நடத்திகொண்டிருக்கிறோம் என்று இரண்டு சீட்டுகள் போடுங்கள் என்றும் சொன்னார்கள். அவர்கள் மாத சீட்டும், வாரச்சீட்டும் நடத்தினார்கள்.

நான் ரூ.61000 வாரச்சீட்டில் 1 சீட்டு சேர்ந்தேன். நான் 72 வாரம் பணம் செலுத்தினேன். சாட்சி 23 வாரங்கள் என்று மறுபடியும் சொன்னார்.

நான் ரூ.33000 வாரச்சீட்டில் 2 சீட்டு சேர்ந்தேன். அதில் 72 வாரங்கள் செலுத்தினேன்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் 3 சீட்டுகள் சேர்ந்தேன். அதில் 42 வாரங்கள் செலுத்தினேன்.

நான் ரூ.61000 சீட்டில் மொத்தம் ரூ.7 ஆயிரத்தி முந்நூற்றி சில்லரைசெலுத்தினேன்.

நான் ரூ.33000 சீட்டில் மொத்தம் ரூ.எழுத்தி இரண்டாயிரம் செலுத்தினேன்.

நான் ரூ.50000 சீட்டில் மொத்தம் ரூ. 48 ஆயிரத்தி எழுநுற்றி சில்லரை செலுத்தினேன்.

நான் 2019 பொங்கல் வரை சீட்டு செலுத்தினேன். அதற்கு பிறகு சீட்டு பிரிக்கவில்லை. அதற்கு பிறகு அவர்கள் வீட்டிற்கு போனபோது யாரும் இல்லை. 9 மாதம் கழித்து ஆஜர் எதிரிகள் வந்திருப்பதாக கிருஷ்ணன் தகவல் சொன்னார். நானும் எனது அம்மாவும் ஆஜர் எதிரிகள் வீட்டிற்குசென்றோம். ஆஜர் எதிரிகளிடம் சீட்டு பணம் கேட்டபோது இங்கு எதற்கு வந்திர்கள் வெளியே போங்கள் என்று அசிங்கமான வார்த்தைகளால் பேசினார்கள். வெளியே போங்க தேவடிய மகனே, சிறுக்கி மகனே என்று பேசினார்கள். சீட்டு பணம் கேட்டு வந்தால் வெட்டிபோடுவேன் என்று சொன்னார்கள். அதற்குபிறகு வீட்டு வந்துவிட்டு சாயங்காலம் கடையம் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றோம். நாங்கள் காலை 7.00 மணியளவில் சீட்டு பணம் கேட்டோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார் . நாங்கள் காவல் நிலையத்தில் இருந்தோம். எனக்கு சீட்டு பணம் கிடைக்கவில்லை. வேறுயாருக்கும் சீட்டு பணம் கிடைக்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தார்கள் பின்பு சாயங்காலம் வீட்டில் வந்து விசாரித்தார்கள்.

நேரமின்மை காரணமாக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 563/2024 |
| | : | Prosecution P.W - 16 |
| NAME | : | செல்வக்குமாரி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.10.2024

முதல் விசாரணை

நான் வெய்க்காலிப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் சத்துணவில் சமையல்வேலை செய்கிறேன், பீடியும் சுற்றுவேன். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன், முத்துலெட்சுமி ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் சீட்டு நடத்தியதால் எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகள் ரூ.50000, ரூ.33000, ரூ.30000 சீட்டு நடத்தினார்கள்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் 3 சீட்டுகள் சேர்ந்தேன். நான் 42 வாரங்களுக்கு பணம் செலுத்தினேன்.

நான் மொத்தம் ரூ.52170 பணம் செலுத்தியுள்ளேன். அதற்கு பிறகு சீட்டு பிரிக்கவில்லை. நாங்கள் போய் பணம் செலுத்தபோனபோது 2019 தை மாதம் ஆஜர் எதிரிகள் ஊரில் இல்லை. 10 மாதம் கழித்து ஆஜர்எதிரிகள் வந்தார்கள். மாயவன் கோவிலில் வைத்து கிருஷ்ணன் என்பவர் கேட்க போனபோது நாங்களும் போய் கேட்டோம். அப்போது சீட்டு

ரூபாய் கேட்டு வரக்கூடாது என்று தேவடிய சிறுக்கி என்று திட்டினார்கள். நாங்கள் காலை 7.00 மணியளவில் சென்று கேட்டோம். சாயங்காலம் 5.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு சென்றோம். கிருஷ்ணன் புகார் கொடுத்தார். பணம் கிடைக்கவில்லை. நிறைய பேருக்கு பணம் தரவேண்டும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் மாயவன் கோவில் வரித்தாரரா என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 4ம் வகுப்பு படித்துள்ளேன்.
ரூ.50000 சீட்டு எப்போது ஆரம்பிக்கப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ரூ.50000 சீட்டில் எத்தனை புள்ளிகள் இருந்தார்கள் என்றால் 101 புள்ளிகள் இருந்தார்கள். சீட்டு ஏலம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு நான் சென்றிருக்கிறேனா என்றால் இல்லை. அவர்கள் தான் பணம் வாங்கி செல்வார்கள். அவர்கள் எங்கு வந்து பணம் வாங்குவார்கள் என்றால் என் வீட்டில் வந்து வாங்குவார்கள். எந்த தேதியில் எவ்வளவு பணம் கொடுத்தேன் என்று நான் எழுதிவைத்துள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு எழுதிவைத்த பேப்பரை போலிஸ் விசாரணையின்போது நான் கொடுத்தேன் என்றால் சரிதான். கொடுத்தாக சொல்லும் புகாரில் நான் ரூ.50000 சீட்டில் மூன்று சீட்டுகள் 42 வாரம் செலுத்தியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரில் யார் எல்லாம் கையொப்பம் செய்தோம் என்றால் 70 பேர் கையொப்பம் செய்தோம். போலிசார் என்னை எப்போது விசாரித்தார்கள் என்றால் புகார் கொடுத்த மறுநாள் போலிசார் வந்துள்ளார்கள். நான் வேலைக்கு சென்றுவிட்டதால் அதற்கு பிறகு என்னை விசாரித்தார்கள். என்னை விசாரித்தது ஆண், போலிசா, பெண் போலிசா என்றால் ஆண் போலிஸ் விசாரித்தார். என்னை விசாரித்த போலிஸ் அதிகாரியிடம் நான் மாயவன் கோவில் வரித்தாரராக இருக்கிறேன் என்று சொன்னேனா என்றால் இல்லை. என்னை போலிசார் விசாரித்தபோது நாங்கள் காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க வந்தோம் என்று சொன்னேனா என்றால் ஆமாம். 2019 தை மாதத்திற்கு பிறகு இந்த புகார் கொடுத்தாக சொல்லும் காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் எதிரிகள் சீட்டு பிரித்து பணம் தரவில்லை என்று போய்விட்டார்கள் என்று புகார் எதுவும் காவல் நிலையத்திலோ, உயர் அதிகாரியிடமோ, கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகள் வந்த பிறகு புகார் கொடுத்தோம். 2019 தை மாதத்திற்கு பிறகு இடைப்பட்ட காலத்தில் புகார் கொடுக்காமல் இருந்ததற்கு சிறப்பு காரணம் எதுவும் உள்ளதா என்றால் எதிரிகள் வந்த பிறகு புகார் கொடுத்தோம்.

அசா1 கிருஷ்ணனின் வேண்டுகோளுக்கு இணங்க பின்யோசனையுடன் சீட்டு பணம் நடத்தாத எதிரிகள் மீது சீட்டு பணம்

நடத்தியதாக கொடுத்த பொய் புகாருக்கு பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சீட்டு பணம் நடத்ததாத காரணத்தினால்தான் 10 மாத காலங்கள் நானோ மற்ற சாட்சிகளோ எதிரிகள் மீது எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. அந்தோணிராஜ் என்பவரின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்தோணிராஜீக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் அவருக்கு வெய்க்காலிப்பட்டி. சீதாலட்சுமியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமலட்சுமியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமலட்சுமியின் ஊர் எனக்கு தெரியாது என்றால் அவருக்கு வெய்க்காலிப்பட்டியாகத்தான் இருக்கும். அருமைக்கிளியின் கணவர் பெயர் என்ன என்றால் தமிழ்மணி. அருமைக்கிளியின் வீடும் என் வீடும் ஒரே தெருவில் உள்ளது என்றால் சரிதான். டேவிட்அமல்ராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகனின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகனுக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். செல்வராணியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் ராமசாமி. பொன்பாண்டி என்பவரின் அப்பா பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பொன்பாண்டி என்பவரின் ஊர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். சாந்தி என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல்வராஜ் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குணசீலன் என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்தோணிமுத்து நாடார் மகன் ஜோசப்ராஜ் என்பவரை எனக்கு தெரியாது என்றால் சரிதான். மரியசெல்வம் என்பவரின் மனைவி பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆட்களை தெரியும் பெயர் தெரியாது. பூங்கொடி சூசை என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் அவர் ஆம்பளை ஆள் அல்லவா, அவர் அம்மாவுக்கு 150 வயது இருக்கும், அவர் ஆம்பளை ஆள்.

நான் சொல்வது போல், நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரிகளிடம் போய் பணம் கேட்டிருப்பது கிடையாது என்றாலும் நான் முதல் விசாரணையில் சொன்ன வார்த்தைகளால் எங்களை ஏசியிருப்பது கிடையாது என்றாலும், என்னை சீட்டுபோட எதிரிகள் சொல்லியிருப்பது கிடையாது என்றாலும், எதிரிகள் சீட்டு பணம் நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல.

1ம் எதிரி மாயவன் என்ன வேலைசெய்கிறார் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 1ம் எதிரி மாயவன் வீட்டிற்கும் 2ம் எதிரி மாயவநாதன் வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரு தெரு தள்ளி உள்ளது. போலிசார் என்னை விசாரிக்கும்போது எதிரிகள் சீட்டுபணத்தை

என் வீட்டில் வந்து வாங்குவார்கள் என்று சொன்னேன் என்றால் சரிதான்.

எதிரிகள் சீட்டு பணம் நடத்திவில்லை என்பதால்தான் அசா1 னின் வேண்டுகோளுக்கு இணங்க நானும் மற்றவர்களும் சீட்டு பணம் கட்டி எதிரிகள் ஏமாற்றி விட்டார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகள் ஒருபோதும் சீட்டு நடத்தியிருப்பது கிடையாது என்றாலும், எங்களிடம் சீட்டுபோட கேட்டிருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல.

2ம் எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை

நான் முதல் விசாரணையில் சொன்னத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான். நான் ஏலத்தில் கலந்துகொள்வேனா என்றால் இல்லை. 2வது சீட்டு மாயவன் கோவிலுக்குதான் என்றால் சரிதான். சீட்டு கோவிலில் இருந்து நடத்தியதால்தான் இரண்டாவது சீட்டு கோவிலுக்கு என்றால் சரிதான். நான் ரூ.50000 சீட்டுக்கு வாரம் எவ்வளவு செலுத்துவேன் என்றால் ரூ.1500 செலுத்துவேன். கழிவு எதுவும் போகுமா என்றால், கழிவை கழித்துவிட்டுத்தான் சீட்டு கட்டுவோம். ஏலம் எடுத்தநபருக்கு உடனேயே கோவிலில் வைத்து பணம் கொடுத்துவிடுவார்கள் என்றால் அது எனக்கு தொியாது. எதிரிகள் வீட்டில் வந்து சீட்டு பணம் வாங்கிசெல்வதாக சொல்லியுள்ளதில் சிட்டையில் வரவு வைத்து கொடுப்பார்களா என்றால் இல்லை. ஏலம் எடுத்தவர்கள் அதற்கு பிறகு வரும் சீட்டுக்களை கழிவு இல்லாமல் செலுத்தவேண்டும் என்றால் சரிதான். 42 வாரம் சீட்டு எடுத்தவர்களும் அதற்கு பிறகு சீட்டு பணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். பிரிக்கவில்லை என்பதால் சீட்டு பணம் செலுத்தியிருக்கமாட்டார்கள்.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும், இரண்டாம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் யாரும் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல.

1ம் எதிரிதரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

Calendar }

Miscellaneous } Case No : - CC// 563/2024

: Prosecution P.W - 15

NAME : முத்துலட்சுமி

FATHER'S NAME :

VILLAGE :

TALUK :

CASTE :

CALLING :

RELIGION :

AGE :

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 24.10.2024

**முதல் விசாரணை**

நான் வெய்க்காலிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் பீடி சுற்றும் வேலை செய்துவருகிறேன். ஆஜர்எதிரிகளை எனக்கு தெரியும். எனக்கு கிருஷ்ணன், அந்தோணிராஜ், செல்வராஜ், ஜோசப் ராஜ், பூங்கொடி சூசை, அருமைகிளி, டேவிட் அமல்ராஜ், பாலமுருகன், செல்வராணி, சீதாலெட்சுமி, பொன் பாண்டி, சாந்தி, குணசீலன் ஆகியோர்களை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளுக்கும் எனக்கு ஒரே ஊர். ஆஜர் எதிரிகள் என் வீட்டில் வந்து சீட்டு போட கேட்டார்கள். தெரிந்தவர்கள் என்பதால் சீட்டு போட்டேன். ஆஜர் எதிரிகள் மாதசீட்டு, வாரச்சீட்டு நடத்தினார்கள். நான் வாரச்சீட்டில் சேர்ந்தேன்.

நான் ரூ.50000 வாரச்சீட்டில் இரண்டு சீட்டுகளும், நான் ரூ.30000 வாரச்சீட்டில் ஒரு சீட்டும் போட்டேன்.

நான் ரூ.33000 வாரச்சீட்டில் ஒரு சீட்டு போட்டேன்.

நான் ரூ.50000 வாரச்சீட்டிற்கு ஒரு வாரத்திற்கு ஒரு சீட்டுக்கு ரூ.500 வீதம் ரூ.1000 செலுத்தினேன். நான் 42 வாரங்களுக்கு பணம்

செலுத்தினேன்.
நான் ரூ.30000 வாரச்சீட்டில் ரூ.300 வீதம் 38 வாரங்கள் செலுத்தினேன்.
நான் ரூ. 33000 வாரச்சீட்டில் ரூ.300 வீதம் 72 வாரங்கள் செலுத்தினேன்.
மேற்சொன்ன பணம் செலுத்தி முடித்தவுடன் ஆஜர் எதிரிகள் ஊரை விட்டு போய்விட்டார்கள். சுமார் 6 வருடத்திற்கு முன்பு ஒரு தை மாதம் போய்விட்டார்கள், அதற்கு பிறகு ஒரு 9 மாதம் கழித்து வந்தார்கள். கிருஷ்ணன் என்பவர் ஆஜர் எதிரிகள் வந்ததை சொன்னவுடன் நாங்கள் எல்லோரும் போய் மாயவன் கோவிலில் சென்று ஆஜர் எதிரி மாயவனிடம் சீட்டு பணம் கேட்டோம். ஒரு கூதி மக்களுக்கும் தரமாட்டேன், ஒரு புண்ட மக்களுக்கும் தரமாட்டேன் என்று கெட்ட வாய் பேசினார். நீங்கள் பணம் கட்டியதற்கு என்ன அத்தாட்சி இருக்கிறது என்று கேட்டார். நீங்கள் செய்வதை செய்யுங்கள் என்று சொன்னார். எதவும் செய்தால் கொன்னு போடுவேன் என்று சொன்னார். காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார்கள் நானும் வேறு வழியில்லாமல் உடன் சென்றேன். கடையம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். அதற்கு பிறகும் பணம் கிடைக்கவில்லை. நிறைய ஆட்களுக்களுக்கும் பணம் கிடைக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

1ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் மாயவன் கோவில் வரித்தாரரா என்றால் இல்லை. அந்தோணிராஜை எனக்கு தெரியுமா என்றால் சீட்டு கட்டும்போது தெரியும், நேரில் பார்த்தால் தெரியும். அந்ததோணி ராஜ் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சீத்தாலட்சுமியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமலட்சுமியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ராமலட்சுமிக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அருமைக்கிளியின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பக்கத்தில்தான் இருக்கிறார். அவர் கணவர் பெயர் தமிழ்மணி. டேவிட் அமல்ராஜ் என்பவரின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகனின் அப்பா பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பாலமுருகனுக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. செல்வராணியின் கணவர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. செல்வராணியை தெரியும். எனக்கு ஞாபகம் இல்லை. சாட்சி தானாக ராமசாமி என்று சொன்னார். பொன்பாண்டி என்பவரின் தகப்பனார் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பொன்பாண்டி என்பவருக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சாந்தி என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் சாந்தி என்பவரின் ஊர் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான்.

செல்வராஜ் என்பவரின் தகப்பானார் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் செல்வராஜ் என்பவரின் ஊர் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். குணசீலன் என்பவரின் தகப்பானார் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் குணசீலன் என்பவரின் ஊர் எனக்கு தெரியாது என்றாலும் சரிதான். பூங்கொடி சுசை என்பவரின் கணவர் பெயர் எனக்கு தெரியாது என்றாலும் அவருக்கு எந்த ஊர் என்று எனக்கு தெரியாது என்றாலும் சரியல்ல அவரை எனக்கு தெரியும், பூங்கொடி சுசை ஒரு ஆண் அவரது மனைவி இறந்துவிட்டார்.

நான் ரூ.30000, ரூ.33000, ரூ.50000 சீட்டு எந்த வருடம் மாதம் முதல் செலுத்தினேன் என்றால் அது எனக்கு தெரியாது. எனக்கு படிப்பறிவு இல்லை.

ரூ. 30000 சீட்டில் என்னுடன் எத்தனை புள்ளிகள் சேர்ந்தார்கள் என்றால் என் வீட்டு அருகில் உள்ள அருமைக்கிளி என்பவர் சேர்ந்தார் என்று எனக்கு தெரியும்.

ரூ. 50000 சீட்டில் என்னுடன் எத்தனை புள்ளிகள் சேர்ந்தார்கள் என்றால் என் வீட்டு அருகில் உள்ள அருமைக்கிளி, செல்வராஜ் என்பவர் சேர்ந்தார் என்று எனக்கு தெரியும்.

ரூ. 33000 சீட்டில் என்னுடன் எத்தனை புள்ளிகள் சேர்ந்தார்கள் என்றால் எனக்கு தெரியவில்லை.

என்னை போலிசார் எந்த தேதியில் விசாரித்தார்கள் என்றால் காவல்நிலையம் சென்றிருந்தபோது விசாரித்தார்கள், அதற்கு பிறகு வீட்டில் வந்து விசாரித்தார்கள், தேதி ஞாபகம் இல்லை.

என்னை ஆண் போலிஸ் விசாரித்தாரா என்றால் ஆமாம். அந்த ஆண் போலிஸ் விசாரித்தபோதுதான் நான் வாக்குமூலம் கொடுத்தேன் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வைத்தும், வீட்டிலும் விசாரித்தார்கள்.

என்னை போலிசார் விசாரித்தபோது நான் எங்கள் ஊர் மாயவன் கோவில் வரித்தாரர் என்று சொன்னேனா என்றால் இல்லை. காவல் நிலையத்தில் யார் எல்லாம் புகாரில் கையொப்பம் செய்தோம் என்றால் நான் கையொப்பம் செய்தேன், அருமைக்கிளி, செல்வராணி கையொப்பம் செய்தார்கள். வேறு யார் எல்லாம் அந்த புகாரில் கையொப்பம் செய்தார் என்று எனக்கு தெரியாது என்றால் அப்போது தெரியும். நாள் ஆனதால் தற்போது ஞாபகம் இல்லை. நாள் ஆனதால் தற்போது ஞாபகம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தோம் என்றால் காலை 7.30 மணிக்கெல்லாம் சென்றோம், மாலையில் வரச்சொன்னார்கள், சாயங்காலம் 5.00 மணியளவில் புகார் கொடுத்தோம். ஆஜர் எதிரிகள் வீடு எங்கு

உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் வெய்க்காலிப்பட்டியில் கோவில் அருகே உள்ளது. ஆஜர் எதிரிகள் இரண்டுபேர் வீடும் பக்கத்தில் பக்கத்தில் உள்ளது என்றால் சரியல்ல. ஒருவர் வீடு கோவில் பக்கத்தில் உள்ளது மற்றொருவர் வீடு தள்ளிஉள்ளது. மற்றொருவர் வீடு எத்தனை தெரு தள்ளி இருக்கும் என்றால் அது ரோட்டில் இருந்து உள்ளே இருக்கிறது.

ரூ.33000 சீட்டில் நான் ஆரம்பம் முதல் சீட்டு பணம் செலுத்திவருகிறேனா என்றால் ஆமாம். ரூ.33000 மற்றும் ரூ.30000 சீட்டில் ஒவ்வொரு வாரமும் சீட்டு நடத்தியதாக சொல்லும் தேதியில் இருந்து ரூ.300 செலுத்தினேனா என்றால் ஆமாம்.

ரூ.50000 சீட்டில் ஒவ்வொரு வாரமும் சீட்டு நடத்தியதாக சொல்லும் தேதியில் இருந்து ரூ.500 செலுத்தினேனா என்றால் ஆமாம்.

எதிரிகள் நடத்தியதாக சொல்லும் சீட்டில்இதுவரை எத்தனைபேர் சீட்டு எடுத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியவில்லை. ரூ.33000, ரூ.30000 மற்றும் ரூ,.50000 சீட்டில் மொத்தம் எத்தனை பேர்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் நான் ரூ.50000 வாரச்சீட்டிற்கு ஒரு வாரத்திற்கு ஒரு சீட்டுக்கு ரூ.500 வீதம் ரூ.1000 செலுத்தினேன் என்றும் நான் 42 வாரங்களுக்கு பணம் செலுத்தினேன் என்றும் நான் ரூ.30000 வாரச்சீட்டில் ரூ.300 வீதம் 38 வாரங்கள் செலுத்தினேன் என்றும் நான் ரூ. 33000 வாரச்சீட்டில் ரூ.300 வீதம் 72 வாரங்கள் செலுத்தினேன் என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2019 தை மாதம் சீட்டு பணம் நடத்தவில்லை என்று சொல்லியுள்ளதில் அது குறித்து சீட்டு பணம் நடத்தவில்லை என்று புகார் கொடுத்தேனா என்றால் அப்போது புகார் கொடுக்கவில்லை. நான் 2019 தை மாதத்திற்கு பிறகு இடைப்பட்ட காலத்தில் சீட்டு நடத்தவில்லை என்றும் சீட்டு பணத்தை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றும் சொல்லி புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்னத்தான் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரிதான்.

நான் சொல்வது போல், நான் சொன்ன தேதியில் சொன்ன நேரத்தில் எதிரிகளிடம் போய் பணம் கேட்டிருப்பது கிடையாது என்றாலும் நான் முதல் விசாரணையில் சொன்ன வார்த்தைகளால் எங்களை ஏசியிருப்பது கிடையாது என்றாலும், என்னை சீட்டுபோட எதிரிகள் சொல்லியிருப்பது கிடையாது என்றாலும், எதிரிகள் சீட்டு பணம் நடத்தியிருப்பது கிடையாது என்றாலும் சரியல்ல.

உண்மையிலேயே ,இந்த எதிரி சீட்டு பணம் நடத்தி என்னையும்

மற்றவர்களையும் ஏமாற்றி சீட்டு பணம் பெற்றிருந்தால் 2019 தை மாதம் முதல் தைமாதத்திலேயே எதிரி மீது புகார் கொடுத்திருப்பேன் என்றாலும், எதிரிகள் சீட்டு பணம் நடத்திவில்லை என்பதால்தான் அசா1னின் வேண்டுகோளுக்கு இணங்க நானும் மற்றவர்களும் சீட்டு பணம் கட்டி எதிரிகள் ஏமாற்றி விட்டார்கள் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்மில்லை என்றாலும் சரியல்ல. போலிசார் விசாரிக்கும்போது புகார் கொடுக்க நானும் வந்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை

வாரம்தோறும் ஏலத்தில் கலந்துகொள்வேனா என்றால் ஏலத்தில் கலந்துகொள்ளவில்லை. பணம் கொடுத்துவிட்டு செல்வேன். ஏலம் என்றைக்கு நடக்கும் என்றால் ஞாயிற்று கிழமை சாயங்காலம் 7.00 மணிக்கு நான் பணம் கொடுத்துவிட்டுநான் வருவேன். ஏலம் 8.00 மணிக்கு நடக்கும். மேற்படி சீட்டில் இரண்டாவது சீட்டை மாயவன் கோவிலுக்கு எடுத்துகொள்வார்கள் என்றால் சரிதான். அதனால்தான் சீட்டு கோவிலில் வைத்து நடந்தது என்றால் சரிதான். ரூ.50000 சீட்டில் எத்தனை சீட்டு போட்டேன் என்றால் இரண்டு சீட்டுகள் போட்டேன். ரூ.50000 சீட்டில் ஒரு சீட்டுக்கு மொத்தம் எவ்வளவு செலுத்தினேன் என்றால் ஒரு சீட்டுக்கு வாரம் ரூ,.500 செலுத்தினேன்.

ரூ.50000 சீட்டில் ஒரு சீட்டுக்கு மொத்தம் எவ்வளவு செலுத்தினேன் என்றால் ரூ.35000 செலுத்தியுள்ளேன்.

நான் முதல் விசாரணையில் சொல்வதுபோல் இந்த வழக்கிற்கும் 2ம் எதிரிக்கும் சம்மந்தமில்லை என்றாலும், இரண்டாம் எதிரியோ அவருக்கு வேண்டப்பட்டவரோ தனிப்பட்ட முறையில் யாரும் சீட்டு நடத்தவில்லை என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன சீட்டுகளில் சீட்டு பணம் எடுத்தவர்கள் பணம் கட்டவில்லை என்றால் அது எனக்கு தெரியாது. ஏலம் கேட்டு சீட்டு எடுத்தவர்களுக்கு உடனே பணம் கொடுத்துவிடுவார்களா என்றால் கொடுத்துவிடுவார்கள், அது எனக்கு தெரியாது நான் உடனே வந்துவிடுவேன்.

1ம் எதிரிதரப்பில் செய்யப்பட்ட குறுக்குவிசாரணை 2ம் எதிரி தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi